மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : இது ஆலைத் துணியின் விலை யேற்றத்தைப்பற்றிய கேள்வி.

திரு. சோ. அழகர்சாமி : தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் கூறும்பொழுது பருத்தி உற்பத்தி செய்யக்கூடிய விவசாயிகள் பாதிக்கின்ற முறையிலே விலை குறைந்துகொண்டே வருகிற காரணத்தால் அவர்களுக்கு அதிகமாகக் கொடுக்கப்படுமா என்று கேட்டபொழுது, மத்திய சர்க்கார்தான் செய்யவேண்டுமென்று சொன்னார்கள். பருத்தி உற்பத்தி செய்யக்கூடிய விவசாயிகளின் நிலைமை பருத்தியின் விலை மிகமிகக் குறைந்துகொண்டே போகிற காரணத்தால், பாதிக்கப்படுகிறது. இதைப் பரிசீலனை செய்வதற்கு நம்முடைய அரசு முன்வருமா ?

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : இது ஆலைத் துணிகளின் விலையேற்றத்தைப்பற்றிய கேள்வி, அதைப்பற்றி மட்டிலும் கேளுங்கள்.

THIRU K. VINAYAKAM : Consequent on the increase in the price of mill-made goods by the Central Government, was any representation made by our Government requesting the Central Government to decrease the price? What are the repercussions of the increase in price on the purchase of handlooms in which we are very much interested? Has the sale of handloom goods gone up in consequence of the increase in the price of mill-made goods?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, அது பற்றிய விவரக் குறிப்பு இல்லை. தனிக்கேள்வி போடவேண்டும்.

தஞ்சை மாவட்டத்திற்குச் சிறப்பு வடிகால் திட்டம்

*250 வினா.—திரு. ஆ. கு. சுப்பையா : மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தஞ்சாவூர் மாவட்டத்திற்கென விசேட வடிகால் திட்டம் ஏதேனும் தயாரிக்கப்பட்டதா ?

(இ) ஆமென்றால், எத்தனை ரூபாயில் திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கிறது ?

(உ) அத்திட்டம் எப்போது அமலாக்கப்படும் ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : (அ) தஞ்சை மாவட்டத்திற்கான வடிகால் ஏற்பாட்டுத் திட்டம்பற்றிய ஆய்வு வேலையை இதற்கென ஏற்படுத்த ஒப்பளிக்கப்பட்டுள்ள தனிப்பிரிவு தற்போது மேற்கொண்டுள்ளது.

(இ) & (உ) இக்கேள்விகளுக்குத் தற்போது இடமில்லை.

திரு. ஆ. கு. சுப்பையா : ஐயா, தஞ்சை வடிகால் திட்டத்தின் விவரங்கள் என்ன ? அந்தத் திட்டத்தின் வேலைகள் எப்பொழுது ஆரம்பிக்கப்படும் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : வடகிழக்குப் பருவ மழைக் காலங்களில் பெருமழை ஏற்படுங்கால் தேங்கி நிற்கும் தண்ணீரைப் பயிர்களுக்கு ஊறுவிளைவிப்பதைத் தடுப்பதற்காக இந்த வடிகால் திட்டத்தை ஏற்படுத்துவதற்காக ஆய்வுகளைச் செய்வதற்கு 1966 ஆம் ஆண்டில் இந்தக் குழு அமைக்கப்பட்டது. ஆனால் இந்தக் குழு அந்தப் பகுதியிலே பணியாற்று

கின்ற கிரவுண்ட் வாட்டர் ஸ்கீம் திட்டத்தோடு இணைந்து பணியாற்றவேண்டி யிருந்த காரணத்தால், இந்தக் குழுவின் வேலை துவங்கப்படவில்லை. 1967-ம் ஆண்டு இந்தக் குழு செயல்படத்தொடங்கி கீழ்க்கண்டவாறு சில திட்டங்களை மேற்கொள்ளச் செயற்குறிப்பு அனுப்பியிருக்கிறது :—

(1) வெண்ணாற்றில் இப்பொழுது வடியும் மேல்நில வடிகாலைத் திருப்புதல்.

(2) வடக்கே கொள்ளிடத்தைப்போலவே தெற்கே பாமினி ஆற்றை யும் வெள்ள நீர் வடிகால் ஆறாக மேம்படுத்துதல்.

(3) நேரடியான வடிகால்களை அமைப்பதன்மூலம் வெள்ளநீரைக் கடலில் செலுத்துவது.

(4) அதிகப்படியான நீரைக் கழிமுகப் பண்ணையில் செல்லும் வகை யில் இறைத்து ஆற்று நீரைக் கடலில் கலக்க வகைசெய்தல்.

(5) தாழ்வான இடங்களில் அவசியமான வடிகால் ஏற்பாடுகளைச் செய்தல்.

இந்த ஆய்வு வேலைகள் முடிவடைய இரண்டு ஆண்டுகள் ஆகும் என்று கணக்கெடுக்கப்பட்டிருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : இது தஞ்சை மாவட்டத்தில் வடிகால்பற்றிய கேள்வி, அதைப்பற்றி மட்டிலும் கேளுங்கள்.

திரு. எஸ். ராமலிங்கம்: தஞ்சை மாவட்டத்தையொட்டி, திருச்சி மாவட்ட மும் இருக்கிறது. தஞ்சை, திருச்சி இரண்டு மாவட்டங்களும் பக்கத்திலே இருக்கின்றன. ஆகவே தஞ்சை மாவட்டத்திலே செய்யப்படுகின்ற வடிகால் திட்டத்தைப்போல் திருச்சி மாவட்டத்திற்கும் செய்வதற்கு அரசாங்கம் ஏற்பாடு செய்யுமா ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : இப்பொழுது ஆய்வில் இருக்கிற வேலையை முடித்ததற்குப் பிறகு திருச்சி எடுத்துக்கொள்ளப்படும்.

திரு. ரா. ராமசந்திர துரை : தஞ்சை ஜில்லாவில் எந்த எந்தத் தாலூகாக்களில் இந்த விசேஷ வடிகால் திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

(விடை இல்லை)

திரு. எம். பூபதி : ஒரு கிளாரிபிகேஷன் சார் . . .

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : இப்போது கிளாரிபிகேஷன் ஒன்றும் கேட்க முடியாது.

மேலூர் வட்டத்திலுள்ள புஞ்சைகள்

* 251 வினா.—**திரு. பெ. மலைச்சாமி :** மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா—

மேலூர் வட்டம், கிடாரிப்பட்டிக்கு அண்மையில் ஓடும் பெரியாற்றி லிருந்து கிளை வாய்க்கால் அமைத்து, பாசன வசதி செய்வதன்மூலம் மேலூர் வட்டத்தின் வட பகுதிப் புஞ்சைகளை நஞ்சைகளாக்கும் செயற்குறிப்பு ஏதேனும் பரிசீலனையிலுள்ளதா ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : இல்லை.